# நான் என்ன செய்ய வேண்டும்?

தொடர் - 68

ஜுன் 2014

*தொகுப்பு:* **Dr. B. வில்லியம் தர்ம ராஜா**

**யோவான்**

3351 "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்" (13:34)

3352 நீ பிறரிடத்தில் அன்பாயிரு; அப்போது நீ இயேசுவின் சீஷன் என்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள் (13:35)

3353 உன் இருதயம் கலங்காதிருப்பதாக (14:1)

3354 இயேசுவை விசுவாசி; அவர் செய்கிற கிரியைகளை நீயும் செய்வாய் (14:12)

3355 இயேசுவின் நாமத்தினாலே கேள்; அது உனக்குச் செய்யப்படும் (14:14)

3356 "நீ என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக கைக்கொள் (14:15,21,23)

3357 "சமாதானத்தை வைத்துப் போகிறேன், என்னுடைய சமாதானத்தையே கொடுக்கிறேன். உன் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" (14:27)

3358 கனி கொடுக்கிற கொடியாயிரு (15:2)

3359 "என்னில் நிலைத்திரு" (15:4)

3360 "நீ என்னில் நிலைத்திராவிட்டால் கனிகொடுக்கமாட்டாய்" (15:4)

3361 "ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுநத கனிகளைக் கொடுப்பான்" (15:5)

3362 "ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான்" (15:6)

3363 "நீ என்னிலும் என் வார்த்தைகள் உன்னிலும் நிலைத்திருந்தால் நீ கேட்டுக்கொள்வதெதுவோ அது உனக்குச் செய்யப்படும்" (15)

3364 மிகுந்த கனிகளைக் கொடு (15:8); உன் கனி நிலைத்திருப்பதாக (15:16)

3365 "என்னுடைய அன்பிலே நிலைத்திரு" (15:9)

3366 "நீ என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பாய்" (15:10)

3367 "நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்" (15:12,17)

3368 "நான் கற்பிக்கிற யாவையும் நீ செய்வாயானால், என் சிநேகிதனாயிருப்பாய்" (15:14)

3369 "உலகம் உன்னைப் பகைத்தால், அது உன்னைப் பகைக்கிறதற்கு முன்னே என்னைப் பகைத்ததென்று அறி (15:18)

3370 நீ உலகத்தானாயிராதே (15:19, 17:14,16)

3371 "நீ என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுப் கொள்வதெதுவோ அதை அவர் உனக்குத் தருவார்" (16:23)



3372 "கேள்; உன் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வாய்" (16:24)

3373 உலகத்தில் உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன் கொள் (16:33)

3374 ஒருமைப்பாட்டில் தேறு (17:23)

3375 இயேசு எங்கே இருக்கிறாரோ, அங்கே நீயும் அவரோடே கூட இரு (17:24)

3376 காணாதிருந்தும் விசுவாசிக்கிறவன் பாக்கியவான் (20:29)

3377 இயேசுவில் அன்பாயிரு (21:15,16)

3378 இயேசுவின் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக (21:15,16,17)

3379 உன் மரணத்தினாலும் தேவனை மகிமைப்படுத்து (21:19)

3380 இயேசுவைப் பின்பற்றிவா (21:22)

**அப்போஸ்தலருடைய நடபடிகள்**

3381 வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திரு (1:5)

3382 எனக்குச் சாட்சியாயிரு (1:8)

3383 சகோதரரோடு கூட ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திரு (1:14)

3384 யூதாஸ் போல ஊழியத்தை இழந்து போகாதே (1:24)

3385 பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படு (2:4)

3386 தேவபக்தியுள்ளவனாயிரு (2:5)

3387 கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொள்; இரட்சிக்கப்படுவாய் (2:21)

3388 கர்த்தரை எப்பொழுதும் உனக்கு முன்பாக நிறுத்தி நோக்கிக்கொண்டிரு (2:25)

3389 நீ மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்; அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவாய் (2:38)

3390 மாறுபாடுள்ள இந்தச் சந்ததியை விட்டு விலகி உன்னை இரட்சித்து கொள் (2:40)

3391 அப்போஸ்தலருடைய உபதேசத்தில் உறுதியாய்த் தரித்திரு (2:42)

3392 அந்நியோந்நியத்தில் உறுதியாய்த் தரித்திரு. (2:42)

3393 ஜெபம் பண்ணுதலில் உறுதியாய்த் தரித்திரு (2:42, 3:31, 16:25)

3394 உன் பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படும் பொருட்டு நீ மனந்திரும்பிக் குணப்படு (3:20)

3395 தேவனுக்கு செவிகொடுக்கிறதைப் பார்க்கிலும் மனுஷருக்குச் செவிகொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ? (4:19)

3396 கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக்கூடாது (4:20)

3397 ஊழியக்காரனே! தேவனுடைய வசனத்தை முழுதைரியத்தோடும் சொல் (4:30,31, 13:5)

3398 பொய் சொல்லாதே (5:4)

3399 மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது (15:29)

3400 தேவனோடே போர் செய்யாதே (5:39)

# சிறுகுழு வேதாகம தியானம்

**Dr. P. செல்வராஜ்** பொள்ளாச்சி

## அப்போஸ்தலனாகிய பவுல் கொலோசெயருக்கு எழுதிய நிருபம்

### அதிகாரம் – 1 பகுதி – I முன்னுரை

### அப்போஸ்தல வாழ்த்துக்கள் (வசனம் 1–8)

1. அப்போஸ்தலர் என்னும் சொல்லுக்கு எவ்வாறு பொருள் கொள்வீர்கள்?
2. பவுல் கொலோசெயரைப் பற்றி கேள்விப்பட்ட இரண்டு சிறந்த பண்புகள் எவை?
3. எப்பாப்பிராவின் இரண்டு இணைப்பொறுப்பு எவை?
4. கொலோசெயரைப் பற்றி பவுலிடம் எப்பாப்பிரா எத்தகைய அறிவிப்பை செய்திருந்தார்?

### பகுதி II அப்போஸ்தலரின் ஜெபம் (வசனம் 9–14)

5. கொலோசெயர் எதனால் நிரப்பப்பட வேண்டும் என்று பவுல் ஜெபிக்கிறார்?
6. கனிகளை பற்றி குறிப்பிடும் போது பவுல் பயன்படுத்தும் அடைமொழி என்ன?
7. கொலோசெயர் எதில் வளர வேண்டுமென்று பவுல் ஜெபித்தார்?
8. கொலோசெயர் எதில் பலப்பட வேண்டுமென்று பவுல் ஜெபித்தார்?
9. பொறுமையையும், நீடிய சாந்தத்தையும் பவுல் எவ்வாறு தகுதிப்படுத்துகிறார்?
10. பரிசுத்தவான்களைப் பற்றி குறிப்பிடும் போது பவுல் தருகின்ற விளக்கம் என்ன?
11. தேவனுடைய இராஜ்யத்திற்கு பவுல் கொடுக்கும் இன்னொரு பெயர் என்ன?
12. மீட்பு என்ற சொல்லுக்கு பவுல் தரும் விளக்கம் என்ன?

### பகுதி III கிறிஸ்துவின் உயர்வு (வசனம் 15–16)

### (i) கிறிஸ்துவின் சிறப்புகள் (15–19)

13. காணமுடியாத தேவனை கிறிஸ்துவில் காணலாம் என்பதை பவுல் எவ்வாறு குறிப்பிடுகிறார்?
14. படைப்பனைத்தும் யாருக்காகப் படைக்கப்பட்டது என் பவுல் கூறுகிறார்?
15. கிறிஸ்து முதலாவது படைக்கப்பட்டவரா?
16. கிறிஸ்து எந்த சரீரத்துக்கு தலைவராயிருக்கிறார்?
17. கிறிஸ்துவுக்குள் சகல பரிபூரணமும் வாசமாயிருப்பது தேவனுக்கு எப்படி இருந்தது?

### (ii) கிறிஸ்துவின் ஒப்புரவாக்கும் ஊழியம் (வசனம் 20–23)

18. கிறிஸ்து தம்முடைய தியாகபலியினாலே எல்லாவற்றையும் யாரோடு ஒப்புரவாக்கினார்?
19. ஒப்புரவாக்கப்பட்ட சத்துருக்கள் எந்த வகையில் முன்னர் சத்துருக்களாக இருந்தார்கள்?
20. நம்மை அவருக்கு முன் எப்படி நிறுத்தும்படியாக
21. பவுல் எதற்கு ஊழியக்காரன் ஆனான்?



### (ii) கிறிஸ்துவின் இரகசியம் (வசனம் 24–29)

22. கிறிஸ்துவின் பாடுகளுக்கும் இங்கே பவுல் குறிப்பிடுகிற அவரின் பாடுகளுக்கும் இடையில் உள்ள வேறுபாடு என்னவென்று நினைக்கிறீர்கள்?
23. தலைமுறை தலைமுறைக்கும் மறைவாயிருந்த தேவ வசனம் எது?
24. தேவன் தெரியப்படுத்த சித்தமாயிருக்கும் இரகசியம் என்ன?
25. அறிவித்தல் புத்தி சொல்லுதல் மற்றும் உபதேசம் ஆகிய மூன்றின் நோக்கம் என்ன?
26. பவுலின் மேற்கூறிய முயற்சிக்கு தேவைப்பட்ட பலத்தை அவர் எவ்வாறு அழைக்கிறார்?

### அதிகாரம் 2 பகுதி IV கிறிஸ்துவின் தெய்வத்துவம் (வசனம் 1–23)

27. பவுல் எதை ஐஸ்வரியம் என்று குறிப்பிடுகிறார்?
28. கிறிஸ்துவுக்குள் அடங்கியிருக்கும் பொக்கிஷங்கள் என்ன?

### (i) நயவசனிப்பால் ஏற்படும் ஆபத்து (வசனம் 4–7)

29. கொலோசெயருடைய எந்த தன்மைகள் பவுலுக்கு மகிழ்ச்சியாயிருப்பதாக இருந்தன?
30. கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்ட பிறகு நாம் செய்யவேண்டியது என்ன?
31. கொலோசெயர் எதில் வளர வேண்டுமென்று பவுல் அவர்களை வாழ்த்துகிறார்?
32. எதனால் நாம் அவரோடே கூட எழுந்தவர்களாக இருக்கிறோம்?

### (ii) தத்துவம் மற்றும் பிரமாணம் பற்றிய எச்சரிப்பு (வசனம் – 8)

33. தத்துவமும் பிரமாணமும் எதற்குரியவை?

### (iii) முழுமை (வசனம் 9 – 13)

34. தெய்வத்துவத்தின் பரிபூரணம் ஆவிக்குரிய ரீதியில் மட்டும் கிறிஸ்து இயேசுவுக்குள் வாசமாயிருக்கிறதா?
35. பாவத்துக்கும், விருத்தசேதனம் இல்லாமைக்கும் மரித்த நம்மை உயிர்ப்பிப்பதற்கு கிறிஸ்து இயேசு செய்தது என்ன?

### (iv) கிறிஸ்துவில் நியாயப்பிரமாணம் இல்லை (வசனம் 14–17)

36. சிலுவை மேல் அணியடிக்கப்பட்ட கையெழுத்து என்பது எதைக் குறிக்கிறது?
37. எவைகளை வருங்காரியங்களின் நிழல் என்று பவுல் குறிப்பிடுகிறார்?
38. எவற்றால் நமக்குரிய பந்தயப் பொருளை நாம் இழந்து போவதற்கான வாய்ப்பு இருக்கிறது?
39. இப்பொழுது தேவ தூதர்களுக்கு ஆராதனை செய்யப்படுகிறதா?
40. சரீர ஒழுக்கம் எதற்கு மட்டும் பயன்படும்?

### அதிகாரம் – 3 பகுதி – V கிறிஸ்துவின் ஐக்கியம் (வசனம் 1–4)

41. நாம் ஏன் பூமியிலுள்ளவைகளல்ல மேலானவையே நாட வேண்டும்?
42. கிறிஸ்து என்னவென்று அழைக்கப்படுகிறார்?

**பகுதி - VI கிறிஸ்தவ வாழ்க்கை (வசனம் 5-25)**

43. தேவ கோபாக்கினை எதனால் மனிதன் மீது வருகிறது?
44. நாம் தரித்துக் கொண்டிருக்கும் புதிய மனிதன் எத்தகைய பூரண அறிவை அடைய வேண்டும்?
45. தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பரிசுத்தர் எத்தகைய ஆடைகளை தரித்துக் கொள்ள வேண்டும்?
46. அன்பைப் பற்றி குறிப்பிடும் போது எத்தகைய அன்பு என்று பவுல் குறிப்பிடுகிறார்?
47. கிறிஸ்துவின் வசனம் நமக்குள்ளே எப்படி வாசமாயிருக்க வேண்டும்?
48. பாடல்களால் போதிக்கவும், புத்தி சொல்லவும் வேண்டுமெனறால் நாம் என்ன செய்ய வேண்டும்?
49. மனித உறவுகளில் முழுமையான உண்மையுடன் நாம் இருக்க நிபந்தனை ஏதாவது இருக்கிறதா?

**அதிகாரம் 4 (வசனம் 1-6)**

50. பவுல் எதற்காக தங்களுக்குக்காக ஜெபம் பண்ண வேண்டுமென்று சபையாரை கேட்கிறார்?
51. புறம்பே இருப்பவருக்கு முன்பாக நாம் எப்படி நடந்து கொள்ளவேண்டும்?
52. நம்முடைய உரையாடல் எப்படி இருக்க வேண்டும்?

**பகுதி - VII கிறிஸ்தவ ஐக்கியம் (வசனம் 7 - 18)**

53. எப்பாப்பிராவின் கொலோசெயருக்கான ஜெபம் என்ன?
54. இல்ல சபைகளுக்கு எடுத்துக்காட்டாக கூறப்பட்டிருக்கும் சபை எது?
55. அர்க்கிப்புக்கு பவுல் கொடுக்கக்கூடிய அறிவுரை என்ன?
56. இந்த நிரூபத்தில் உங்களுக்கு பிடித்தமான வசனம் ஒன்றை குறிப்பிடவும் (ஒன்றிற்கு மேற்பட்ட வசனம் இருந்தாலும் குறிப்பிடவும்)

---

**வரவேற்கிறோம்**

நமது தட்டப்பாரை பணித்தள மிஷனெரி சகோ. ஜேம்ஸ் ஜெயகாந்தன் - திருமதி. ஜெபா தம்பதியினருக்கு 25-5-2014 அன்று கர்த்தர் ஒரு பெண் குழந்தையை சுகப்பிரசவத்தில் கொடுத்தார். தேவனைத் துதியுங்கள்.

**தேவனைத் துதியுங்கள்**

குற்றாலத்தில் நடைபெற்ற வாலிப வெற்றி முகாமில் (மே 22 - 24) 13 வாலிபர்கள் ஞானஸ்நானம் பெற்றனர்.

**ஜெபியுங்கள்**

நம்முடைய மிஷனெரிகள், சிறப்பு ஊழியர்கள், தன்னார்வ ஊழியர்கள், உதவி ஊழியர்கள் பெயர்பட்டியல் தந்துள்ளோம். ஒவ்வொருவர் பெயரையும் சொல்லி ஒவ்வொரு நாளும் அவர்களுக்காக ஊக்கமாய் ஜெபிக்க அந்தப் பட்டியலை உங்கள் வேதாகமத்தில் எடுத்து வைத்து கொள்ளுங்கள்.



# தேவ சாயலாக மாற...

சகோ. S. ஜெபராஜ் President, Grace Ministries

கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் இன்ப நாமத்தில் உங்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். கிறிஸ்துவுக்குள் நீங்கள் இன்னும் வளர ஆவிக்குரிய வாழ்வில் வளம்பெற ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு புதிய விசுவாசவாழ்வு அறிக்கைகளை தேவ ஒத்தாசையோடு அனுபவமாக்கி வருகிறீர்கள் என்று விசுவாசித்து தேவனை ஸ்தோத்தரிக்கிறோம். அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் கொலோசெ பட்டணத்திலுள்ள கிறிஸ்துவுக்குள் பரிசுத்தவான்களும் விசுவாசிகளுமாயிருக்கிற சகோதரர்களுக்கு ஒரு ஒப்பற்ற விசுவாச வாழ்வு அறிக்கையைக் கற்றுக்கொடுக்கிறார். "தன்னை சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்களே" (கொலோ. 3:10).

தேவன் தமது ரூபத்தின்படியேயும் தம்முடைய சாயலாகவும் மனிதனை சிருஷ்டித்தார் (ஆதி. 1:26,27) மனிதனை தேவசாயலாகவே சிருஷ்டித்தார். ஆனால் தேவன் விலக்கின விருட்சத்தின் கனியை புசித்தபடியினால் பூமி சபிக்கப்பட்டது. மனிதன் தேவசாயலை இழந்துபோனான். ஏதேன் தோட்டத்தை ஆட்சி செய்ய உருவாக்கப்பட்ட மனிதன் அதிலிருந்து துரத்திவிடப்பட்டான் (ஆதி. 3:24) முதல் மனிதனாகிய ஆதாம் இழந்துபோன தேவசாயலை, மறுபடியும் நீங்கள் ஒவ்வொருவரும் அணிந்து கொள்ள வேண்டும் என்பதே தேவனுடைய விருப்பம். சங்கீதக்காரனாகிய தாவீது விண்ணப்பம் பண்ணுகிறார் : என்னை ஒடுக்குகிற துன்மார்க்கருக்கும், என்னைச் சூழ்ந்துகொள்ளுகிற என் பிராணப் பகைஞருக்கும் மறைவாக, உம்முடைய செட்டைகளின் நிழலிலே என்னைக் காப்பாற்றும். நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன் (சங். 17:9,15). தேவசாயல் உங்கள் வாழ்க்கையில் உங்களுக்கு எதிரிட்டு வருகிற சத்துருவின் கைக்கும் பிசாசின் கைக்கும் தப்புவித்து, பாதுகாப்பைக் கொடுக்கிற அடைக்கலமாய் இருக்கிறது. தேவசாயலை மனிதன் எப்படி அடைந்து கொள்ள முடியும்? எப்படி தேவசாயலாக மாற முடியும்? இயேசுகிறிஸ்துவை அறிகிற பூரண அறிவினாலும், தேவனால் புதிதாக்கப்படுகிறதினாலும் மட்டுமே அது சாத்தியமாகும்.

## 1. பூரண அறிவடையுங்கள்

என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சிறைப்பட்டு போகிறார்கள். அதினிமித்தம் பாதாளம் தன்னை விரிவாக்கி, தன் வாயை ஆவென்று மட்டில்லாமல் திறந்தது (ஏசா. 5:13,14). அறிவில்லாமை மனிதனை பாவத்தினால் சிறைப்படுத்தி, நித்திய நரகத்திற்கு கொண்டு செல்லுகிறது. என் ஜனம் அறியாமையினால் சங்காரமாகிறார்கள்; நீ அறிவை வெறுத்தாய் ஆகையால் நீ என் ஆசாரியனாயிராதபடிக்கு நானும் உன்னை வெறுத்துவிடுவேன் (ஓசியா 4:6). அறியாமை உங்களை தேவனை விட்டு தூரப்படுத்துகிறது. அறியாமையினால்

தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருக்கிறீர்கள். அறியாமை, தேவனைவிட்டு மனிதனை தூரப்படுத்துவதோடு தேவஆசீர்வாதத்தை மனிதன் இழந்து போகச் செய்கிறது. எனவேதான் நீங்கள் பூரண அறிவடையவேண்டும் என வேதம் அறிவுறுத்துகிறது. தேவனுடைய பூரண அறிவை நீங்கள் பெறும்பொழுது உலக அறியாமையும் உங்களைவிட்டு அகன்று போகிறது. நான் கல்வி பயின்ற கல்லூரியின் நோக்கம் (Motto) "அகவிருள் அகற்றி அறிவொளி வீசுக" என்பதாகும். தேவனை அறிகிற பூரண அறிவு வரும்பொழுது அகத்தின் இருள் மறைந்துபோகிறது. ஆண்டவருடைய அறிவு அளவில்லாதது (சங். 147:5). கர்த்தர் ஞானத்தைத் தருகிறார். அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும் (நீதி. 2:6). தேவன் சாலொமோனுக்கு தரிசனமாகி : நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் என்றார். அவன் கர்த்தாவே ஞானத்தையும் அறிவையும் எனக்கு தந்தருளும் என்று கேட்டபோது தேவன் சாலொமோனுக்கு ஞானமும் விவேகமும் தந்ததுமல்லாமல் மற்ற ராஜாக்களுக்கு இல்லாத ஐசுவரியத்தையும் சம்பத்தையும் கனத்தையும் கொடுத்தார் (2நாளா. 1:7-12). இந்த நாட்களில் உங்களுடைய பிள்ளைகள் அல்லது நண்பர்கள், வாலிப சகோதர சகோதரிகள், ஒரு கல்வி ஆண்டை முடித்து இன்னொரு புதிய கல்வி ஆண்டிற்குள் நுழைகறீர்கள். கடந்த ஆண்டில் நீங்கள் வெற்றி பெற்றிருக்கலாம் அல்லது தவறி இருக்கலாம். படிப்பிலோ, விளையாட்டிலோ வேலை வாய்ப்பைப் பெறுவதிலோ தோல்வி என்பது ஒருவருக்கு நிரந்தரமல்ல, அது முடிவுமல்ல. அது ஒரு புதிய வாழ்வின் ஆரம்பம். நீங்கள் வெற்றியின் சிகரத்தில் இருந்தாலும், தோல்வியின் படியில் துவண்டுபோய் நின்றாலும் தேவன் உங்களை பூரண அறிவடையச் செய்ய வல்லவராயிருக்கறார். சோர்ந்து போகாதிருங்கள். கர்த்தருக்குப் பயப்படுதல் இன்னதென்று நீ உணர்ந்து, தேவனை அறியும் அறிவைக் கண்டடைவாய் (நீதி. 2:5) 'கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் (நீதி. 1:7) இயேசுவை அறிகிற அறிவின் வாசனை உங்களுக்குள் வரும்பொழுது கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் உங்களை வெற்றி சிறக்கப்பண்ணுகிறார் (2கொரி. 2:14) இயேசுவை பூரணமாய் அறிந்து பற்றிக்கொள்ளுங்கள்.

## 2. புதிதாக்கப்படுங்கள்

தேவனைஅறிகிற அறிவு உங்களை புதிதாக்கும். தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் (ரோமர் 12:2). ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின (2கொரி. 5:17). மோசம் போக்கும் இச்சைகளையுடைய பழைய பாவ வாழ்க்கையை களைந்து போடுங்கள். இதுவரை நீங்கள் வாழ்ந்த பாவ வாழ்க்கைக்கு ஒரு முற்றுப்புள்ளி வையுங்கள். இப்பொழுதே தேவன் உங்களை புதிதாக்க விரும்புகிறார். இதோ சகலத்தையும் புதிதாக்குகிற தேவனால் (வெளி. 21:5) உங்கள்



வாழ்க்கையை புதிதாக்கி பொலிவுறச் செய்ய முடியும். இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி உங்களைச் சுத்திகரிக்கும். (1யோ. 1:7). நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல் தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும் பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார். (தீத்து 3:5). உங்கள் வாழ்க்கையில் கிறிஸதுவின் கரத்தில் அர்ப்பணிக்காத காரியங்கள், தேவனுக்கு பிரியமில்லாதது ஏதாவது இருந்தால் அதை அறிக்கை செய்யுங்கள். அவர் உங்களுக்கு மன்னித்து உங்களை புதிதாக்குவார். அதோடுகூட உங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படும் (2கொரி. 4:16).

## 3. புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்.

கிறிஸ்துவுக்குள் புதிதாய் பிறந்த நீங்கள் உங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையைச் சரியான பாதையில் தொடங்க வேண்டும். இப்பொழுது உங்களுக்கு புதிய வாழ்க்கை கிடைத்துள்ளதால் அது வளர்ச்சியடைய வேண்டும். மறுபிறப்பு அல்லது கிறிஸ்துவுக்குள் பிறத்தல் எவ்வளவு முக்கியமானதோ வளர்ச்சியும் அதே அளவு முக்கியமானது. நான் குழந்தையாயிருந்தபோது குழந்தையைப் போல பேசினேன், குழந்தையைப் போல சிந்தித்தேன், குழந்தையைப் போல யோசித்தேன்; நான் புருஷனானபோதோ குழந்தைக்கேற்றவைகளை ஒழித்துவிட்டேன். (1கொரி. 13:11). கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன். ஆயினும் பிழைத்திருக்கிறேன்; இனி நானல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார் (கலா. 2:20). இப்படிப்பட்ட அனுபவம் உங்களுக்கு வேண்டுமல்லவா? முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி மெய்யான நீதியிலும், பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள். பிறனுடனே மெய்யைப் பேசுங்கள். பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள். உங்கள் கைகளினாலே நலமான வேலை செய்து பிரயாசப்படுங்கள். பக்திவிருத்திக்கேதுவான நல்ல வார்த்தைகளையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள். தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள். ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். (எபேசி. 4:22-32). புதிய குணங்களையும், நற்கிரியைகளையும் உங்களில் காண்கிறவர்கள் தேவசாயலை உங்களில் காண்பார்கள். ஆவிக்குரிய நிலையிலிருந்து நீங்கள் பின்வாங்கிப் போகாதபடி வேத வசனங்கள் உங்களை காப்பாற்றும் தேவனுடைய வசனங்களை உங்கள் இருதயங்களில் வையுங்கள். அவை நீங்கள் தேவனுக்கு விரோதமாய பாவம் செய்யாதபடி உங்களை காக்கும்.

**எனது விசுவாச வாழ்வு அறிக்கை : என்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனஷனைத் தரித்துக் கொள்கிறேன்.**

# என்னை ஆராய்ந்து...

*தொகுப்பு :* சகோ. B. பொற்செல்வன் ஆசீர்

## கலாத்தியர்

1. நான் மனுஷரையா, தேவனையா, யாரை பிரியப்படுத்தப்பார்க்கிறேன்? (1:10)
2. நான் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் யோசனை பண்ணுகிறேனா? (1:16)
3. நான் பிழைத்திருக்கிறது என்னில் அன்புகூர்ந்து எனக்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேனா? (2:20)
4. நான் தேவனுடைய கிருபையை விருதாவாக்குகிறேனா? (2:21)
5. ஆவியிலே ஆரம்பம் பண்ணின நான் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவு பெறப் போகிறேனா? (3:3)
6. நான் பிழைக்கிறது விசுவாசத்தினாலே பிழைக்கிறேனா? (3:11)
7. கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நான் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டிருக்கிறேனா? (3:27)
8. நான் இன்னும் இவ்வுலகத்தின் வழிபாடுகளுக்கு அடிமைப்பட்டவனா(ளா) யிருக்கிறேனா? (4:3)
9. நான் இன்னும் நாட்களையும், மாதங்களையும், காலங்களையும், வருஷங்களையும் பார்க்கிறேனா? (4:10)
10. அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல் கிறிஸ்து எனக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலை கொண்டிருக்கிறேனா? (5:1)
11. அன்பினால் கிரியை செய்கிற விசுவாசத்தை உடையவனா(ளா)யிருக்கிறேனா? (5:6)
12. சத்தியத்துக்கு கீழ்ப்படிய அர்ப்பணிப்பு உள்ளவனா(ளா)ய் தடைகளை ஜெயிக்கிறவனா(ளா)ய் இருக்கிறேனா? (5:7)
13. அன்பினால் மற்றவர்களுக்கு ஊழியம் செய்கிறேனா? (5:13)
14. என்னிடத்தில் நான் அன்பு கூருவது போல பிறரிடத்திலும் நான் அன்பு கூருகிறேனா? (5:14)
15. மற்றவர்களை கடித்துப் பட்சிக்கிறவனா(ளா)ய் இருக்கிறேனா? (5:15)
16. மாம்சத்தின் கிரியைகளை வெறுத்து தள்ளுகிறேனா? (5:19-21)
17. மாம்சத்தின் கிரியைகளை வெறுத்து தள்ளுகிறேனா?
18. ஆவியின் கனியை நாடித் தேடுகிறேனா? (5:22,23)
19. கிறிஸ்துவை உடையவனா(ளா)கிய நான் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறேனா (5:24)
20. நான் ஆவிக்கேற்றபடி நடக்கிறேனா? வீண்புகழ்ச்சியை வெறுக்கிறேனா? மற்றவர்களை கோபமூட்டாதிருக்கிறேனா? மற்றவர்கள்மேல் பொறாமை கொள்ளாமல் இருக்கிறேனா? (5:25,26)



# எனது அர்ப்பணங்கள்

*தொகுப்பு :* சகோ. B. பொற்செல்வன் ஆசீர்

## எபேசியர்

1. நான் அன்பில் பரிசுத்தமுள்ளவனா(ளா)கவும் குற்றச்சாட்டுகளுக்கு நீங்கலாகும் வாழ்வு உள்ளவனா(ளா)கவும் வாழ என்னை அர்ப்பணிக்கிறேன் (1:4)
2. நான் கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாக தெரிந்து கொள்ளப்பட்டன்(ள்) என்ற உணர்வோடு வாழ என்னை அர்ப்பணிக்கிறேன் (1:12)
3. கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்ட நான் இது கிரியைகளினாலல்ல என்று உணர்வோடு பெருமை பாராட்டாத தாழ்மையுள்ள வாழ்வு வாழ என்னை அர்ப்பணிக்கிறேன் (3:13)
4. கிறிஸ்வுக்குள்ளான உபத்திரவங்களில் சோர்ந்து போகாமல் அதன் மகிமையை உணர்ந்து வாழ என்னை அர்ப்பணிக்கிறேன் (3:13)
5. நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையுள்ள தேவனை அவரது வல்லமையை சார்ந்து வாழ என்னை அர்ப்பணிக்கிறேன் (3:20)
6. நான் அழைக்கப்பட்ட அழைப்பிற்கு பாத்திரமாய் நடந்து கொள்ள என்னை அர்ப்பணிக்கிறேன் (4:1)
7. மிகுந்த மனத்தாழ்மையும், சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவனா(ளா)ய் வாழ என்னை அர்ப்பணிக்கினே் (4:2)
8. அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி வாழும் வாழ்விற்கு என்னை அர்ப்பணிக்கிறேன் (4:2)
9. சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமைப்பாட்டை காத்துக் கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருக்க என்னை அர்ப்பணிக்கிறேன் (4:17)
10. வீணாண சிந்தையிலே இனி நடவாமலிருக்க என்னை அர்ப்பணிப்பிறேன் (4:17)
11. முந்தின நடக்கைக்குரிய மோசம் போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை களைந்துபோட்டு புதுவாழ்வு வாழ என்னை அர்ப்பணிக்கிறேன் (4:22)
12. பொய்யை களைந்து பிறருடனே உண்மையை பேச என்னை அர்ப்பணிக்கிறேன் (4:25)

# உம் வாஞ்சையே எனது விருப்பமே

*தொகுப்பு :* சகோ. B. பொற்செல்வன் ஆசீர்

## பிலிப்பியர்

1. என்னில் தேவன் தொடங்கிய நற்கிரியையை அவர் கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்தி வருவாரென்று நம்பியிருக்கிறேன் (1:5)
2. எனது அன்பு உத்தமமானவைகளை யாவரும் ஒப்புக்கொள்ளத்தக்கதாக அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிகமாய் பெருக அர்ப்பணிக்கிறேன் (1:9)

3. இயேசு கிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவனா(ளா)ய் வாழ வாஞ்சிக்கிறேன் (1:10)
4. நான் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவனு(ளு)ம் இடறலற்றவனு(ளு)மாயிருக்க வேண்டுதல் செய்கிறேன். (1:11)
5. நான் ஒன்றிலும் வெட்கப்பட்டு போகாமல் எப்பொழுதும், இப்பொழுதும் மிகுந்த தைரியத்தோடே ஜீவனாலாகிலும், சாவினாலாகிலும் கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்பட வாஞ்சிக்கிறேன் (1:20)
6. கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல, அவர் நிமித்தமாக பாடுபடு கிறதற்கும் எனக்கு அருளப்பட்டிருக்கிறது என்பதை நிச்சயித்திருக்கிறேன் (1:29)
7. ஒன்றையும் வாதினாலாவது வீண் பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே செய்து நிறைவேற்ற அர்ப்பணிக்கிறேன் (2:3)
8. மனத்தாழ்மையினாலே மற்றவர்களை என்னிலும் மேன்மையுள்ளவர்களாக எண்ண தீர்மானிக்கிறேன் (2:3)
9. எனக்கானவைகளை மாத்திரமல்ல பிறருக்கானவைகளையும் என் நோக்கமாக கொள்ள ஒப்புக்கொடுக்கிறேன் (2:4)
10. கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே என் சிந்தையாக மாற்ற பிரயாசப்படுகிறேன் (2:5)
11. அதிக பயத்தோடும், நடுக்கத்தோடும் என் இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படுகிறேன் (2:12)
12. தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் என்னில் உண்டாக்க அர்ப்பணிக்கிறேன் (2:13)
13. ஜீவ வசனத்தை பிடித்துக் கொண்டு, உலகத்திலே சுடர்களைப் போல பிரகாசிக்க வேண்டியன் நான் என்று உணர்வை காத்துக்கொள்வேன் (2:14)
14. கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவனும் கபடற்றவனும் மாசற்ற பிள்ளையுமாயிருக்க ஒப்புக்கொடுக்கிறேன் (2:15)
15. எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்து நிறைவேற்ற தீர்மானிக்கிறேன் (2:16)

## மறுமையில் பரனோடு

விருதுநகர் மாவட்டம், புல்லக்கவுண்டன்பட்டி, நமது மிஷனெரி ஆலயத்தைச் சேர்ந்த சகோதரர் அமல்ராஜ் (வயது 53) அவர்கள் நமது மிஷனெரி ஆலயத்தில் ஆரம்ப நாள் முதல் விசுவாசியாயிருந்து சபையின் எல்லாக் காரியங்களிலும் நமது ஊழியர்களுக்கு எல்லா விதத்திலும் உறுதுணையாக நின்றவர் பொறுப்புடன் எல்லாப்பணிகளையும் செய்யக்கூடிய அருமையான சகோதரர். அவர் எதிர்பாராது 5-5-2014 அன்று பைக்கில் இருந்து விழுந்து விபத்தைச் சந்தித்தார்கள். தகுந்த மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்பட்டு பலனளிக்காது 10-5-2014 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். சகோதரர் அவர்களின் துணைவியார் திருமதி. நவரோசி மற்றும் பிள்ளைகளின் ஆறுதலுக்காக ஜெபியுங்கள். அன்னாரது மறைவு சபைக்கும், நமது ஊழியத்திற்கும் பெறும் இழப்பாகும்.



## நமது மிஷனெரிகளுக்காய் ஜெபியுங்கள்

1. சகோ. B. பொற்செல்வன் ஆசீர்
2. திருமதி. பாலா ஜோஸப்பின் ஆசீர்
3. சகோ. S. ஜெபராஜ்
4. சகோதரி. R. சாந்திராஜம்
5. சகோ. கோயில்பிள்ளை
6. திருமதி. எஸ்தர் கோயில்பிள்ளை
7. சகோ. ஆர்தர்துரை
8. திருமதி. கிரீடா ஆர்தர்
9. சகோதரி ஜெயந்தி
10. சகோ. K. ஸ்டீபன்
11. திருமதி. ரூத்மேரி
12. சகோ. பாலகுரு ஜோஸப்
13. திருமதி. ஆரோக்கியம்
14. சகோதரி. எமிம்மாள்
15. சகோ. ஜெரால்டு ராஜசேகர்
16. திருமதி. சாந்தி ராஜசேகர்
17. சகோதரி. ஞானகிருபை
18. சகோ. சாமுவேல் பீட்டர்
19. திருமதி. ஜெயமணி
20. சகோ. ராமராஜ் பிலிப்பு
21. திருமதி. ரூத் பிலிப்பு
22. சகோ. பால் கந்தசாமி
23. திருமதி. லீதியாள்
24. சகோ. தீமோத்தேயு
25. சகோ. மோசஸ்
26. திருமதி. ரூபி
27. சகோ. துரைராஜ்
28. திரலுமதி. ஜெபலீலா
29. திருமதி. நல்மணி குரூஸ்
30. திருமதி. மேரிரோஸ்
31. சகோ. மனோஜ் குமார்
32. திருமதி. நிஷா
33. சகோ. நவநீதன்
34. திருமதி. ரெபேக்காள்
35. சகோ. சுவிசேஷமுத்து
36. திருமதி. கஸ்தூரி
37. சகோ. ஜேம்ஸ் மணிகண்டன்
38. திருமதி. கெத்ரீன்
39. சகோ. கிதியோன்
40. திருமதி. ஜெபசெல்வி
41. திருமதி. சரோஜா
42. சகோ. டேனியல்
43. திருமதி. எப்சிபா
44. சகோதரி. சாரோன்
45. சகோ. சைமன் சுரேஷ்
46. திருமதி. ஏஞ்சல்
47. சகோ. சாம் டேனியல்
48. திருமதி. ஜெயசீலி
49. சகோ. சுதாகர்
50. சகோ. ஆனந்த குமார்
51. திருமதி. அனித்தா
52. சகோ. ஜேம்ஸ்
53. திருமதி. ஜெபா
54. சகோதரி. கிரேஸ் எஸ்தர்
55 சகோ. இம்மானுவேல்
56. சகோ. தனபாலன்
57. திருமதி. ராணி தனபாலன்
58. திருமதி. பரிபூரணம்
59. சகோ. அருள்ராஜ்
60. திருமதி. விஜயமாலா
61. சகோ. சந்திரசேகர்
62. திருமதி. புஸ்பா சந்திரசேகர்
63. சகோ. A. கோயில்பிச்சை
64. திருமதி. பரஞ்ஜோதி பாக்கியம்

**சிறப்பு ஊழியர்கள்**

65. சகோ. சுபாஷ் சந்திரபோஸ்
66. சகோ. T. செல்வராஜ்
67. Rev. J.S. ஜெபராஜ்
68. சகோ. P.J. சேவியர்
69. சகோ. R. செல்வகுமார்
70. திருமதி. மேகலா செல்வராஜ்
71. திருமதி. ஞானவடிவு ராஜா
72. திருமதி. நிசி சாம்
73. திரு. ரமேஷ்குமார்

**தன்னார்வ ஊழியர்கள்**

74. சகோ. ஆபிரகாம்
75. திருமதி. சாராள் ஆபிரகாம்
76. திருமதி. ஜான்சி அமல்ராஜ்

**உதவி ஊழியர்கள்**

77. சகோ. ரஞ்சித்குமார்
78. திருமதி. விஜி

## ஜெபியரங்கள் (அப்போஸ்தலர் நடபடிகள்)

1. ஊழியர்கள் அனுதினமும் ஜெபத்திலும் வேத வசனத்தை போதிக்கிறதிலும் தரித்திருக்க (6:4)
2. ஊழியர்கள் விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்தவர்களாய் இருக்க (6:8)
3. ஊழியர்கள் மூலம் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களும் அடையாளங்களும் நடைபெற (6:8)
4. ஊழியர்களுக்கு மனுஷரால் மற்றவர்களால் எதிர்த்து நிற்க கூடாத ஞானத்தையும் ஆவியையும் தேவன் அருள (6:10)
5. ஊழியர்கள் இயேசுவோடு இருக்கிறவர்கள் என்று அவர்களை காண்கிறவர்கள் அறிந்து கொள்ள (4:13)
6. ஊழியர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு தேவவசனத்தை தைரியமாய் பிரசங்கிக்க (4:31)
7. ஊழியர்கள் யாவர் மேலும் பூரண கிருபை கட்டளையிடப்பட (4:33)
8. ஊழியர்கள் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்து பலமாய் சாட்சி கொடுக்க (4:33)
9. ஊழியர்கள் பிரசங்கிக்கும்போது ஜனங்கள் இருதயத்தில் குத்தப்பட்டவர்களாய் மனந்திரும்ப (2:37)
10. ஊழியர்களுடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளும் கூட்டம் பெருக (2:40)
11. ஊழியர்களின் செய்தியைக் கேட்டு ஞானஸ்நானம் பெறுவோர் எண்ணிக்கை ஆயிரமாயிரமாய் பெருக (2:41)
12. ஊழியர்கள் மூலம் கர்த்தர் அனுதினமும் இரட்சிக்கப்படுகிறவர்களை சபைக்கு கொண்டு வர (2:47)
13. ஊழியர்கள் ஜனங்கள் எல்லாரிடத்திலும் தயவு பெற்றவர்களாய் தேவனைத் துதிக்கிறவர்களாய் வளர (2:47)
14. ஊழியர்கள் ஜீவ வார்த்தைகள் எல்லாவற்றையும் ஜனங்களுக்கு உபதேசிக்க (5:20)
15. ஊழியர்கள் இயேசு என்னும் உபதேசத்தால் தாங்கள் செல்லும் ஊர்களை, கிராமங்களை நிரப்ப (2:28)
16. ஊழியர்கள் பிரவேசிக்கும் ஊர்கள் கிராமங்களிலெல்லாம் சந்தோஷம் உண்டாக (8:8)
17. ஊழியர்கள் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற "ஆண்டவரே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்" என்று திறந்த இருதயத்தோடு ஜெபிக்கிறவர்களாய் இருக்க (9:6)
18. ஊழியர்கள் தாமதமில்லாமல் கிறிஸ்துவை குறித்து பிரசங்கிக்க (9:20)
19. ஊழியர்கள் தைரியமாய் எதிர்ப்பின் நடுவிலும் கிறிஸ்துவை பிரசங்கிக்க (9:29)



## *நமது ஊழியங்களை தாங்குவோர் கவனத்திற்கு*

நீங்கள் ஜெபத்துடன் நமது மிஷனெரி ஊழியத்தை, வாலிப, மாணவ, சிறுவர் ஊழியத்தை, ஜெப ஊழியத்தை தாங்க காணிக்கைகள் அனுப்பும் போது வங்கி கணக்குகள் மூலமும் அனுப்பலாம்.

| வங்கி கணக்கு பெயர் | IFS Code | வங்கி பெயர் | கணக்கு எண் |
|---|---|---|---|
| மிஷனெரி ஊழியம்<br>Grace Ministries<br>Grace Ministries | SBIN0007629<br>TMBL0000156 | SBI Bazaar, Tuticorin<br>TMB Ltd., Sipcot Tuticorin | 10237757808<br>156100710400123 |
| வாலிப மாணவர் சிறுவர் ஊழியம்<br>Young Soul Winners Mission | TMBL0000035 | TMB Ltd., Pudukottai. Tuty | 035100710400087 |
| ஜெப ஊழியம்<br>Tabernacle of God Mission | TMBL0000033 | TMB Ltd., Elairampannai. | 033100710400026 |

கடிதம் மற்றும் M.O. அனுப்ப தொடர்பு முகவரி :

**சகோ. B. பொற்செல்வன் ஆசீர்**

**கிருபையின் ஊழியங்கள்,** ஆபிரகாம் நகர், பெரியநாயகபுரம், தூத்துக்குடி-628 101.

Grace Ministries, Abraham Nagar, Periyanayagapuram, Tuticorin-628 101.

நீங்கள் அனுப்பும் காணிக்கைகள் யாவும் ஊழியத்தில் வரவு வைக்கப்பட்டு உங்களுக்கு இரசீது அனுப்பப்படும்.

நீங்கள் காணிக்கை அனுப்பியதை 94432-89026 என்ற எண்ணிற்கு SMS மூலமாகவோ அல்லது கடித மூலமாகவோ எங்களுக்கு தெரிவியுங்கள்.

### *தூத்துக்குடியில் அற்புத உபவாச நாள்*

**நாள் : 2014 ஜுன் 24 – கடைசி செவ்வாய்**
**நேரம் : காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**
**இடம் : காமராஜர் திருமண மண்டபம்,**
**பிரையண்ட் நகர், 5வது தெரு மெயின், தூத்துக்குடி.**
*தேவசெய்தி :* **சகோ. பா. பொற்செல்வன் ஆசீர்**

### விருதுநகர் மாவட்டம் ஏழாயிரம் பண்ணை
### தேவனுடைய கூடாரத்தில் திறப்பின் வாயில் ஜெபம்

**2014 ஜுன் 25, கடைசி புதன் – காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**

*தேவசெய்தி :* **சகோ. A. கோயில்பிச்சை**
கிருபையின் ஊழியங்கள், பாளையங்கோட்டை
**சகோ. பா. பொற்செல்வன் ஆசீர்**

**நீங்களும் வாருங்கள்! கலந்து கொள்ளுங்கள்!**

**இயேசு உங்களுக்கு அற்புதம் செய்வார்!!**

**தேவனுடைய கூடாரம்,** மெயின் ரோடு, ஏழாயிரம்பண்ணை-626 201. போன் 04562-258194